உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சேஷாத்திரிசிவனார் அருளிச்செய்த

ராகத்துவேஷப்பிரகரணம்.

சாதனசதுஷ்டயப்பிரகரணம்.

இவை

சமிவனக்ஷேத்திரமென்னும்

கோயிலூர்

ஸ்ரீ முத்துராமலிங்க சுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ சிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ-இராமசாமிச்சுவாமியவர்களால்

பலருடையவேண்டுகோளின்படி

பலபிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்து

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

இரண்டாம்பதிப்பு.

1897.

துன்முகி௵ தை௴.

இதன் விலை. அணா - ௨.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

முதலாவது

ராகத்துவேஷப்பிரகரணம்.

ராகத்துவேஷாதிகளின் சொரூபத்தை
நிருபிக்கின்றார்.

அவையாவன.

காமமுதற் பதினாறுகுணங்களில் ராகமுதற் பதின்மூன்றுந் தள்ளத்தக்கனவும் இச்சை முதன் மூன்றுங் கொள்ளத்தக்கனவுமாம். அவைகளின் சுரூபம் நிரூபம் நிரூபிக்கப் படுகின்றது ராகத்தி னம்சமே காமமாதலாற் காமாதியெனக்கூறினார் இப்பதின்மூன்றும் ராகத்துவேஷங்களின் பரியாயமெனக் கொள்க.

எந்த ராகத்துவேஷங்களினாற் றிரிவித கரணங்களுந் திரிவித கன்மங்களைச் செய்கின்றதோ அந்த ராகத்துவேஷங்களின் குணங்களை நிரூபிக்கிறோம் (அவையாவன) ராகம் - துவேஷம் - காமம் - குரோதம் - லோபம் - மோகம் - மதம் - மச்சரம் - ஈரிஷை - அசூயை - டம்பம் - தர்ப்பம் - அகங்காரம் - எனப்பதின்மூன்றும். இப்பதின்மூன்று மோட்சமடைதற்கு விக்கினமாயிருக்கின்றபடியா லிவற்றை முமூட்சுவானவர்கள் காலத்திரயங்களிலும் பரிசியாமற் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

(இவைகளின் விபரம்) பரஸ்திரீகமனம் பண்ணவேண்டு மென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு ராகமென்று பேர். இதைமுமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றால் பூருவத்தி லிராவணன் பரதாரமான சீதையம்மனை யிச்சித்த ராகத்தினு லவன்பிராணஹானிபந்து நாசமிராச்சியஹானி யிகபரங்களி லபகீர்த்தியிவைமுதலான வநேகவநர்த்தங்கள் அனுபவித்ததும், இன்னஞ் சகோதரரான சுந்தோபசுந்தா ளிருவருந் திலோத்தமையைக்கண் டென்பாரி என்பாரியென்றடித்துக் கொண்டிறந்ததும், இன்ன மனேகம்பேர் இந்தராகத்தினுற் றுக்கமனுபவித்ததுஞ் சாத்திரங்களிற்கண்டிருக்கிறே மானபடியினுலும் இப்போதிருக்கிறபேர்களு மிந்தராகத்தினலநேக துக்க மனுபவிப்பதை பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிற படியினுலும் இனி பிறக்கப்போகிற பேர்களிடத்திலுமிந்த ராகமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிற படியினுலும் இந்த ராகத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது சித்தம்.

இப்படியே தனக்கொருவ னபகாரம்பண்ணினு லவனுக்குப்பதிலபகாரம் பண்ணவேண்டுமென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்குத் துவேஷமென்று பேர். இதை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது.

ஏன் விட்டுவிடவேண்டியதென்றால் பூருவத்தில் இரணியகசிபன் றன்றமையனைக்கொன்ற நாராயணனை கொல்ல வேண்டுமென்ற துவேஷத்தினு லவனுடைய பிராணஹானி பந்துநாச மிராச்சிய ஹானி யிகபரங்களி லபகீர்த்திக

ளிவைமுதலான வநேகவநர்த்தங்க ளனுபவித்தது மின்னு மநேகம்பே ரிந்தத்துவேஷத்தினுல் துக்கமனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினுலும் இப்போ திருக்கிறபேர்களு மிந்தத் துவேஷத்தினு லநேகதுக்க மனுபவிப்பதைப் பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிற படியினுலும் இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திநு மிந்தத்துவேஷ மிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிற படியினுலும் இந்தத்துவேஷத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது சித்தம்.

இப்படியே புத்திரமித்திர களத்திர கிரகக்கிராமக்ஷேத்திர தனதான்யாதிகண் மேன்மேலுஞ் சம்பாதிக்கவேண்டுமென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்குக் காமமென்று பேர். இதை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திநு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றுல் பூருவத்தில் நரகாசுரன் லக்ஷம் ஸ்திரீகளைக் கலியாணஞ்செய்வதற் காசித்துத் தேவஸ்திரீகள் பதினுயிரம்பேர்களைச் சிறைபிடித்து வந்ததைக் கேட்ட ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியால் அவன் பிராணஹானி பந்துநாச மிராச்சியஹானி யிகபரங்களி லபகீர்த்தி யிவைமுதலான துக்கங்களனுபவித்தது மின்னுமனேகம்பேர் துக்கமனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினு மிப்போதிருக்கிறபேர்களு மிந்தக்காமத்தினு லநேக துக்க மனுபவிப்பதைப் பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறபடியினுலும் இனிபிறக்கப்போகிற பேர்களிடத்திநு மிந்தக்காமமிருந்தாற் றுக்கமேயனுபவிப்பார்களென்று தோற்றுகிற படியினுநு மிந்தக் காமத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது சித்தம்.

இப்படியே தனக்கு வேண்டிய காரியங்களிலொருவன் விக்கினம்பண்ணினா லவனிடத்தி லாக்கிரகமாக விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்குக் குரோதமென்று பேர் இதை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது.

ஏன்விடவேண்டியதென்றால் பூருவத்தில் பகாசூரன்றனது புசிப்பிற்கு விக்கினஞ்செய்த வீமராஜன்பேரிற் குரோதம்வைத்ததனா லவன் பிராணஹானி பந்துநாச மிராச்சியஹானி யிகபரங்களி லபகீர்த்தி யிவைமுதலான வநேக வநர்த்தங்க ளனுபவித்தது மின்னு மநேகம்பேரிந்தக்குரோதத்தினால் துக்கமனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலும் - இப்போதிருக்கிறபேர்களிந்தக் குரோதத்தினாற் றுக்கமனுபவிக்கிறது பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும் இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்தி லிந்தக்குரோதமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலு மிந்தக்குரோதத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

இப்படியே தான் சம்பாதித்த பதார்த்தங்களி லொருத்தருக் கொருகாசளவு செலவுபண்ணலாகாதென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு லோபமென்றுபேர். இதை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது.

ஏன்விடவேண்டியதென்றால் பூருவத்தில் துரியோதனனானவன் சூதாடிக்கெலித்த பாண்டவர்களுடைய ராச்சியத்தி லவர்கள் வசிக்கக்கூட விடங்கொடுக்கமாட்டோமென்ற லோபத்தினா லவன் பிராணஹானி பந்துநாச மிராச்சியஹானி யிகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான வநேகவநர்

த்தங்க ளனுபவித்தது மின்னு மனேகம்பேர் துக்கமனுபவித் ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலும் இப்போதிருக்கிறபேர்க ளிந்த லோபத்தினா லநேக துக்க மனுபவிப்பதும் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும் இனிப் பிறக்கப்போகிறபேர்களிடத்திலு மிந்தலோபம் இருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலும் - இந்தலோபத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

இப்படியே தான் சம்பாதித்த பதார்த்தத்தின்பேரிற் பிரியமோதப் பிரமோதமாய் விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு மோகமென்றுபேர். இந்த மோகத்தை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனாவிட்டு விடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றால் பூருவத்தில் தசரதமகாராஜன் தனது ஜேஷ்டபுத்திரனான ஸ்ரீராமன் பேரில் வைத்த மோகத்தினா லவர் மாதுருவாக்கிய பரிபாலன நிமித்தங் காட்டுக்குப்போன வதனா லிவர் பிராணஹானி பந்துநாச மிராச்சியஹானி யிகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான வநேகவநர்த்தங்க ளனுபவித்தது மின்னு மிந்தமோகத்தினா லநேகம்பேர் துக்க மனுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலும் இப்போதிருக்கிற பேர்களிந்த மோகத்தினா லநேகந் துக்கங்க ளனுபவிக்கிறது பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிற படியினாலும் இனிப்பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்த மோகமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலு மிந்த மோகத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிட வேண்டியது சித்தம்.

இப்படியே ஐசுவரிய பாகுள்ளியத்தினற் கெர்வித்து கிருத்தியாகிருத்தியந் தெரியாமல் விகற்பித்துவருகிற சித்த விருத்திக்கு மதமென்றுபேர். இந்தமதத்தை முமூட்சுவான வர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டு விடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றால் பூருவத்தில் கார்த்திய வீரியார்ச்சுனனுனவன் றன்னிடத்தில் வந்த மகாரிஷியான நாரதரை மதித் துபசாரம்பண்ணுமற் கெர்வித்திருந்ததைக் கேட்ட பரசுராமனு லவன் பிராணஹானி பந்துநாச மிராச் சியஹானி யிகபரங்களி லபகீர்த்தி யிவைமுதலான வநேக வனர்த்தங்க ளனுபவித்தது மின்னுமிந்த மதத்தினு லநேகம் பேர் திக்கமனுபவித்ததிஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறே மானபடியினுலும் இப்போதிருக்கிறபேர்க ளிந்தமதத்தினு லநேகதுக்க மனுபவிக்கிறது பிரத்தியக்ஷமாகக் கண்டிருக் கிறபடியினுலும் - இனிப்பிறக்கப்போகிற பேர்களிடத்திலும் இந்த மதமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்க ளென்று தோற்றுகிறபடியினுலும் - இந்த மதத்தை முமூட்சுவான வர்கள் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது சித்தம்.

இப்படியே ஒருத்தர் சுகமாயிருந்தா லவர்களைப்பார்த் துச் சகிக்காமல் விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு மச்சர மென்றுபேர் இந்த மச்சரத்தை முமூட்சுவானவர்கள் கா லத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண் டியது.

ஏன் விடவேண்டியதென்றால் பூருவத்தில் சிசுபாலனுன வன் தருமராஜன் ராஜசூயயாகத்தி லக்கிரதாம்பூலம் வாங் கத்தக்கவராரென்று விசாரித்து ஸ்ரீகிருஷ்ணசுவாமிக்குக் கொடுத்ததைச் சகிக்காமல் மச்சரப்பட்டதினு லவனுடைய

பிராணஹானி பந்துநாசமிராச்சியஹானி யிகபரங்களி லபகீர்த்தி யிவைமுதலான வநேகவநர்த்தங்க ளனுபவித்தது மின்னுமிந்த மச்சரத்தினா லநேகம்பேர் துக்கமேயனுபவித்தது சாத்திரங்களிற் கண்டிருக்கிறோமானபடியினாலும் - இப்போதிருக்கிறபேர்க ளிந்தமச்சரத்தினாற் றுக்கமேயனுபவிக்கிறது பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும் இனிப் பிறக்கப்போகிறபேர்களிடத்திலு மிந்த மச்சர மிருந்தாற் றுக்கமேயனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலும் இந்தமச்சரத்தைமுமூட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

இப்படியே தனக்கு வந்ததுக்கம் பிறத்தியாருக்கு வரலாகாதாவென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு ஈரிஷையென்றுபேர்இந்தஈரிஷையை முமூட்சுவானவர்கள்காலத்திரயத்திலுமில்லாமற் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றால் பூருவத்தில் அருணாட்சதன் தனக்குவந்த துக்கந் தனதிஷ்டனான வாணாசுரனுக்குவரலாகாதாவென் றெதிர்த்த வீரிஷையினாற் பிராணஹானி பந்துநாச மிராச்சியஹானி யிகபரங்களி லபகீர்த்தி இவைமுதலான வநேக வநர்த்தங்களனுபவித்தது மின்னுமிந்த வீரிஷையினாலநேகம்பேர்—துக்கமனுபவித்ததுஞ்சாத்திரங்களிற்கண்டிருக்கிறோ மானபடியினாலும் இப்போதிருக்கிறபேர்களிந்த வீரிஷையினாற் றுக்கமேயனுபவிப்பது பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலு மினி பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்த வீரிஷையிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலும் இந்த வீரிஷையை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

இப்படியே தனக்குவந்த சுகம்பராளுக்கு வரலாமாவெ

ன்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு அசூயையென்று பேர். இதை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலுமில்லாமற் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றால் பூருவத்தில் பவுண்டரீக வாசுதேவனானவன் தனக்கும்வாசுதேவன் கிருஷ்ணனுக்கும் வாசுதேவனென்று பேராவென்கிற வசூயையினா லவரிடத்தெதிர்த்துப் பிராண ஹானிபந்துநாச மிராச்சியஹானி யிகபரங்களி லபகீர்த்தி யிவைமுதலான வநேக வநர்த்தங்களானுபவித்தது மின்னுமனேகம்பேரிந்த வசூயையினாற் றுக்கமேயனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறோமன்னபடியிலும் இப்போதிருக்கிறபேர்களு மிந்தவசூயையினாற் றுக்கமேயனுபவிப்பது பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும் இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலிந்த வசூயையிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலுமிந்தவசூயையை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

இப்படியே தான்பண்ணின தருமத்தை நாலுபேரும் பார்த்து பளாநன்றாயிருக்கின்றதென்று சொல்லவேண்டுமென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு டம்பமென்று பேர். இதை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றால் பூருவத்தில் நகூருவமகாராஜனானவன் துருவாச ரிஷியைப்பார்த்து நான் செய்த யாகங்களைப்போல யார் செய்யப்போகிறார் களிது நன்றாயிருக்கிறதே யென்று கேட்க யானைத் துதிக்கைபோல ஆயிரம் வருஷம் நெய்சொரிந்து யாகஞ்செய்தவனு மிப்படி கேட்கவில்லை யிதென்ன டம்பயாகமென்று சொன்னவரைக் கோபி

த்த அவனது யாகத்தோடு மிவன் பிராணஹானி பந்துநாச மிராச்சிய ஹானி யிகபரங்களி லபகீர்த்தி இவைமுதலான வநேக வநர்த்தங்க ளனுபவிப்பது மின்னு மிந்தடம்பத்தி லநேகம்பேர் துக்கமனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறே மானபடியினலும் இப்போதிருக்கிற பேர்களிந்த டம்பத்தினற் றுக்கமே யனுபவிப்பது பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினலும் இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்தடம்பமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினலு மிந்த டம்பத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மன விட்டுவிடவேண்டியது சித்தம்.

இப்படியே புத்திரமித்திர களத்திர தனதானியாதி சம்பத்துத் தனக்கேயுண்டு தனக்கொருத்தருஞ் சமானமில்லையென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்குத் தர்ப்பமென்றுபேர். இதை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலுமில்லாமற் சர்வாத்மன விட்டுவிடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றல் பூருவத்திற் சதகந்தரனவன் ஐசுவரியத்திற் றனக்கொருத்தருஞ் சமானமில்லையென்று அமரர்களுக்கு உபத்திரவஞ்செய்ததை நாரதரிராமருக்கறிவிக்க வவர்பாரியான சீதையம்மனலவன்பிராணஹானி பந்துநாச மிராச்சியஹானி இகபரங்களி லபகீர்த்தியிவைமுதலான வநேகவநர்த்தங்க ளநுபவித்தது மின்னு மிந்தத்தர்ப்பத்தி லநேகம்பேர் துக்கமேயனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறே மானபடியினலும் இப்போதிருக்கிறபேர்க ளிந்தத் தர்ப்பத்தினற் றுக்கமேயனுபவிப்பது பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினலும் இனிப்பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்தத் தர்ப்பமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினலு

மிந்தத்தர்ப்பத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டு விடவேண்டியது சித்தம்.

இப்படியே அடாயென்னை யறியாயா நான்பிடித்தகாரியம் விடுவேனோ நீயாவெனக்குப் புத்திசொல்லுகிறவனென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக் ககங்காரமென்றுபேர். இதை முமூட்சுவானவர்கள் காலத்திரயத்திலுமில்லாமல் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றால் பூருவத்தில் மதுகைடவரென்பவர்கள் மகாவிஷ்ணுவோடு பதினாயிரம்வருஷம் யுத்தஞ்செய் தினையாம லவர் வரங்களுக் காசியாமற்றுங்க ளந்த விஷ்ணுவுக்கு வரங்கொடுத்த வகங்காரத்தினாற் பிராணஹானிபங்நாச மிராச்சியஹானி இகபரங்களி லபகீர்த்தியிவை முதலான வநேக வார்த்தங்க ளனுபவித்தது மின்னு மிந்த வகங்காரத்தினா லநேகம்பேர் துக்கமனுபவித்ததுஞ் சாத்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலும் இப்போதிருக்கிறபேர்க ளிந்த வகங்காரத்தினாற் றுக்கமே யனுபவிப்பது பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறபடியினாலும் இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்தி லிந்த வகங்காரமிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலு மிந்தவகங்காரத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

இந்தராகமுத லகங்காரமீறான பதின்மூன்று குணங்களினா லிராவணன்முதல் மதுகைடவாளீறானபேர்கள் மஹாசமர்த்தாளாயிருந்து மவர்கள் பிராணஹானி முதலான வநேக வார்த்தங்கண் முன்னனுபவித்தது சாத்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலு மிப்படியே வர்த்தமானகாலத்

திலு மிந்தராகாதிகுணங்களா லநேகசனங்கள்பிராணஹானி களும் - அநேகரோகங்களும் - அநேக திரவியநாசங்களும் - பந்துக்கள் விரோதங்களும் அபகீர்த்திகளும் இவைமுதலா ன வநேகவனர்த்தங்க ளனுபவிக்கிறது பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறோ மானபடியினாலும், இனிப்பிறக்கப்போகிற பேர்களுமிந்தராகா திகுணங்களினின்றுவிடுபடாமற்போனார் களாகி லிப்படியே யநேகவநர்த்தங்களனுபவிப்பார்களென் று தோற்றப்படுகிறபடியினாலும் இந்தராகாதிபதின்மூன்றுகு ணங்களு மோக்ஷமார்க்கத்துக்குச் சத்துருவாயிருக்கிறபடியி னாலும் ஜநநமரணப் பிரவாகரூபமான நரகத்துக்கேதுவாயி ருக்கிறபடியினாலும் - இப்பதின்மூன்று குணங்களையு முமூட் சுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது சித்தம்.

இவைகளாலுண்டான ஜநநமரணமே நரகமென்பதாயி தற்குச் சமுசயமில்லை - ஜநநமரணரூபமான தேகமே நரக மென்பதற்குப் பிரமாணம் - எங்கேசரீரமுண்டோ வங்கே யெல்லாந் துக்கமுண்டு எங்கே சரீரமில்லையோ வங்கே யெல் லாந் துக்கமில்லையென்று வேதத்திற் சொல்லியிருக்கிறபடியி னா லிந்தச்சரீரமே சகலதுக்கங்களுக்குஞ் சகலவநர்த்தங்க ளுக்கு மேதுவாக விருப்பதினா லிந்தச் சரீரமே நரக மென்று சொன்னது சித்தம். ஆதலாலிந்தச் சரீரத்துக்கேதுவான வி ப்பதின்மூன்றுகுணங்களையு முமூட்சுவாயிருக்கப்பட்டபேர் க ளவசியம் விட்டுவிடவேண்டியது சித்தம்.

இனிக் கொள்ளத்தக்கதுகளான விச்சைமுதன் மூன்று குணங்களையு நிரூபிக்கிறோம் (அவையாவன) பசிதாக நிமித் த மன்னபானாதிகிராகியமும் மலமூத்திர விசர்ச்சனமும்பண் ணவேண்டுமென்று வருகிற சித்த விருத்திக் கிச்சையென்று பேர்.

இவை பண்ணுமற்போனற் றுக்கமும், பண்ணினற் சுக மூமா யிருக்கு மிதனற் பந்தமோக்ஷஞ் சுவர்க்க நரகமில்லை யாதலாற் கொள்ளத்தக்கதாம்.

இப்படியே மகாதேவரிடத்திற் பிரியம்வருகிற சித்த விருத்திக்குப் பத்தியென்றுபேர்.

குருவேதாந்த சாத்திரங்களின் மிகவும் விசுவாசம்வை த்த சித்தவிருத்திக்குச் சிரத்தையென்றுபேர்.

இந்தப்பத்தி சிரத்தை முத்தியை யடைவிப்பதற் கேது வாதலினலும் பூருவத்திற் கட்டுவாங்கதனென்கின்ற மகாரா சன் இந்தச் சிரத்தாபத்தியின லிரண்டுநாழிகையின் முத்தி யை யடைந்தானென்று சாத்திரங்களிற் கண்டிருக்கிறேமா னபடியினலே முமூட்சுவானவர்க ளிந்தச் சிரத்தாபத்தி யவ சியம் பண்ணவேண்டியது சித்தம். இராகாதி பதினறுகுண ங்களு நிரூபிக்கப்பட்டது.

ராகத்துவேஷப்பிரகரணம்
முற்றுப்பெற்றது.
சர்வஞ்சின்மயம்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது

சாதனசதுஷ்டயப்பிரகரணம்.

முற்பிரகரணத்திற் கற்பனுருபமான விஷயசுகங்களைப் பிரியமாக விசுவசித்ததிற் சுழலாநின்ற மனோவிருத்திக் கவைக துன்பமெனத் தெரிவித் தவ்விருத்தியை விஷயசுகங் களினின்று நீக்கி மேற் பதார்த்த சுகத்திற் பிரியம்வைக்கும் படி செய் ததனுலுண்டான சிரத்தாபத்தியினுற் சித்தசுத்தி யுண்டாகிப் பின்பவ்யதார்த்தம் வெளிப்படுதற் கேதுவான சாதன சதுஷ்டயப் பிரகரணம் நிரூபிக்கிறுர்.

வேதாந்தத்தி னுன்கு சாதனங்க ளதிகாரிகளுக்காகச் சொல்லியிருக்கின்றன - அவைகளின் சுருபங்கிரமத்தி னிரு பிக்கப்படுகின்றது.

எந்தச்சாதன சதுஷ்டய சம்பத்தியி னுல் யாவரும் மோக்ஷமடைவார்களோ வந்தச்சாதன சதுஷ்டய சம்பத் தியை நிருபிக்கிறேும்.

(அவையாவன) நித்தியாநித்திய வஸ்து விவேகம், இகா முத்திரார்த்த பலபோகவிராகம், சமாதிசட்கசம்பத்தி,முமூ ட்சுத்துவமென நான்குவிதமாம். (இவற்றில்) நித்தியா நித் திய வஸ்து விவேகமென்பது - பிரமமேநித்தியவஸ்து சகத்த நித்தியவஸ்துவெனப் பகுத்தறிவதாம்.

இச்சக மநித்தியமென்ப தெப்படியென்றுல் இவை பூத பவுதிகாத்மகமானபடியினு லநித்தியமேயாம். இங்ஙனம்

பூதபவுதிகாத்மகமாகத் தோற்றப்படுகிற சகத்தின்முன்னே பவுதிகங்களுக் கநித்தியத்துவ நிரூபிக்கிறேம்.

அப்பவுதிகமாவ தியாதெனில் நால்வகைத்தோற்றம் எழுவகைப்பிறப்பு - எண்பத்துநான்குலக்ஷம் யோனிபேதங்களாயுள்ள சரீரங்களாம்.

அவற்றி னால்வகைத் தோற்ற மென்பது சராயுச மண்டசஞ் சுவேதச முற்பிச்ச மென்பனவாம்.

(இவற்றிற்) பையிற்கட்டுப்பட்டுப் பிறப்பதுசராயுசமும், முட்டையிற்கட்டுப்பட்டுப் பிறப்பது அண்டசமும், வியர்வையிடமாகப் பிறப்பது சுவேதசமும், பூமியிடமாகப் பிறப்பது உற்பிச்சமுமாம்.

எழுவகைப் பிறப்பென்பது - தேவரும் மாநுடரும் மிருகமும் பட்சிகளும் ஊர்வனவும் நீர்வாழ்வனவுந் தாவரங்களுமாம்.

எண்பத்துநான்குலக்ஷம் யோனிபேதமென்பது - தேவபேதம் பதினாலுலக்ஷமும், மாநுடபேத மொன்பதுலக்ஷமும், மிருகபேதம் பத்துலக்ஷமும், பட்சிபேதம் பத்துலக்ஷமும், ஊர்வனபேதம் பதினொருலக்ஷமும், நீர்வாழ்வனபேதம் பத்துலக்ஷமும், தாவரபேதம் பதினெட்டுலக்ஷமுமாம்.

இவற்றில் - தேவகந்தருவ சித்தசாத்தியகின்னர கிம்புருட குய்யகவித்தியாதர யக்ஷராக்ஷத பூதம்பிரேத பிசாசு சாகினி டாகினி வெதாளாதியான தெவசரீரங்களும், மனுவாதி சக்கிரவர்த்தி பிரமக்ஷத்திரிய வைசிய சூத்திரர்முதலான நரசரீரங்களும், காமதேனு சிம்மமுதலான மிருக சரீரங்களும், அன்னங் கருடன் முதலான பட்சிசரீரங்களும்

சேடனெறும்பு முதலிய ஊர்வனசரீரங்களும், மகரமச்சங் கூர்மமுதலிய நீர்வாழ்வன சரீரங்களும், கற்பகவிருட்சம் பாரிசாத முதலிய தாவரசரீரங்களுமாம்.

பூர்வத்தி லித்தேவர் முதலிய வெண்பத்துநான்குலட்சம் யோனிபேதமாயுள்ள சரீரங்களும் நசித்துப்போனது சாத்திரங்களிற் கண்டிருக்கிறோமானபடியினுலும் இப்படியே வர்த்தமான காலத்திலு மிருக்கின்ற மாதாபிதாமுதலான சகல சரீரங்களும்-நசிப்பது பிரத்தியட்சமாகக் கண்டிருக்கிறபடியினுலும் இனிப் பிறக்கப்போகிற சகலசரீரங்களு மிப்படியே நசிக்குமென்று தோற்றப்படுகிறபடியினுலு மிந்தப்பவுதிகமான சகல சரீரங்களும் அநித்தியமென்பது சித்தம்.

இப்படியே - பிருதிவியாதி பஞ்சபூதங்களுக்கு மநித்தியத்துவம் நிரூபிக்கிறோம்.

அஃதெப்படியென்றால் இப்பூதங்கள் பிறந்திறக்கிறபடியினுலும் - அவயவிகளா யிருக்கிறபடியினுலும் பிரளயகாலத்தி னசித்துப்போகிறபடியினுலும் அநித்தியமேயாம்.

அவைகளெப்படி நசிக்கிறதென்றால் பிரமப்பிரளயம் வருகிறகாலத்திற் பன்னிரண்டு சூரியர்களு முதயமாய் நூறு வருஷ மழையில்லாம லெரித்துச் சகத்தெல்லாம் பஸ்பம் பண்ணிப் பூமியைத் தாங்கிக்கொண்டிருந்த வாதிசேடனுடைய மகுடங்களை பஸ்பம் பண்ணுகிறபோ தந்தவாதிசேடனுடைய முகங்களிலிருந்து காளகூடவிஷாக்கினி பிறந்தந்த விஷாக்கினியுஞ் சூரியாக்கினியுங்கூடி யந்தவாதிசேடன் முதற் றுவாதசாதித்தாளையும் பஸ்பம்பண்ணி யப்படி பஸ்பம்பண்ணின வக்கினியுணின்றுஞ் சத்த மகாமேகங்கள் பிறந்

து நூறுவருஷம் யானைதுதிக்கைபோல வருஷதாரைகள் வருஷிக்கும். அந்தவருஷசலமே காரணமாநிற்கும். அந்த சலத்தில் அப்பூமிபஸ்பம் லீனமாகும் - அப்போதந்தச்சலம் வாயுஸ்தம்பமா நிற்கும். அப்படிநிற்கின்றசலத்தில் வடவானலம் பிறந்ததந்த வேகாரணவமான சலமெல்லாங் கிரகிக்கும். அவ்வடவாக்கினியும் பிரசண்டவாயுவி லீநமாகும். அந்த வாயுவு மாகாசத்தி லீநமாகும். அவ்வாகாசமு மஞ்ஞானத்தி லீநமாகும். அவ்வஞ்ஞானமும் பிரமத்தி லீநமாகும். அப்பிரம மொன்றுமே சேஷித்து நிற்கும். ஆனபடியினாற் பஞ்சபூத பவுதிகாத்மகமான சகத்த நித்தியமென்று சொன்னதும் - இப்படிச்சேஷித்து நின்ற பிரமத்துக்கு வேறேகாரண மில்லாதபடியாற் பிரமமே நித்தியமென்று சொன்னது சித்தம்.

இங்ஙன நித்தியாநித்திய வஸ்துக்களி னிச்சயந்தெரிதலாகிய முதற் சாதனங்கைவந்தாற் போதாதோவென்றாற் போதாது. ஏன்போதாதென்றால் - சிலவித்துவான்கள் சாத்திரபாண்டித்தியத்தினு லாத்மாவொன்றுமே நித்தியமென்றுஞ் சகத்தனித்தியமென்றுஞ் சொல்லிக்கொண்டு ஸ்திரீபுத்திர தனதானியாதி போகங்களி லிச்சைவைத்துக்கொண்டிருக்கிறதினு லநித்தியமானது நித்தியமென்று வருமாதலானிரண்டாஞ்சாதனமான விகாமுத்திரார்த்த பலபோக விராகமுஞ் சம்பாதிக்கவேண்டும்.

இவ்விகா முத்திரார்த்த பலபோக விராகமாவ தியாதென்று லதையு நிரூபிக்கிறேம்.

அஃதாவது, இகலோக வைராக்கியமென்றும் பரலோகவைராக்கியமென்று மிரண்டுவிதமாம்.

அவற்றி லிகலோக வைராக்கியமாவது, ஸ்ரக்குசந்தன வநிதாதி விஷயங்களில் வாந்தாசன மூத்திர புரீஷங்களி

லெப்படி யிச்சைவாராதோ வப்படி யிச்சைவாராமற் போகிறது இவ்விதவைராக்கிய மில்லாவிட்டா லிகத்திற் றான் சம்பாதிக்கவேண்டுமென்கிறபுத்திரமித்திரகளத்திரபசுபிரத்திய பலபந்துகிரகக்கிராமக்ஷேத்திர தனதானியாதிகண்முதலிய வற்றைச்சம்பாதிக்கவேண்டுமென்றான் மிகவும் பிரயாசசாத்தியமாயிருக்கிறபடியினாலும் பிரயாசப்பட்டெத் தனம்பண்ணினா லப்படி யெத்தனம்பண்ணின பதார்த்தங்களிற் சிறிது கூடிவருகிறதுஞ் சிறிது கூடிவாராமலும் போகிறபடியினாலும் அப்படிக்கூடிவந்த பதார்த்தத்தைத்தொட்டு வெகுதுக்க பரம்பரைகள் வருகிறபடியினாலும் அந்ததுக்கத்தோடு கூடிக் கொண்டிருக்கிறவேளையிற் பெரியோர்களா யிருக்கப்பட்ட பேர்கள் வந்தேதாகிலுஞ் சற்காரம் பண்ணவேண்டுமென்று கேட்டதுண்டானா லவர்கள்பேரில் யுத்தாயுத்தங்கள் தெரியாமற் கடினமாயிருக்கப்பட்ட சொல்லினாற்றிரஸ்காரம்பண்ணுகிறான். அவர்களை யப்படி சொல்லுகின்றபோது வீட்டிற்றாயார் முதலானபேர் பிரியவசனஞ்சொல்லிப் பெரியவர்களை யப்படிச்சொல்லலாமாவென்று சொன்னதேயுண்டானா லவர்கள்பேரி லாக்கிரகமாகவிழுந்து யுத்தாயுத்தமில்லாத கடினமானசொல்லினானிராகரிக்கிறா னானபடியினாலும் அப்படி நிராகரித்ததனா லநேகவனர்த்தங்களும் அநேகதோஷங்களும் வருகிறபடியினாலும் அப்பாவத்தினா னரகங்களில் விழுகிறானானபடியினாலும் இப்படி யசாத்தியமான பதார்த்தங்களினா லித்தனை யனர்த்தங்கள் பிறக்கச்சே சாத்தியமான பதார்த்தங்களினா லனர்த்தங்கள் வருகிறதுக்குச சொல்லவேண்டுமா.

அஃதெப்படியென்றால் சாத்தியமான வொருபெண்சாதியைத்தொட்டுச்சோரபயங்களுந்தாயார் தகப்பனார்விரோத

ங்களும் அண்ணன் தம்பி விரோதங்களும் அன்றித் தான்செய்யவேண்டுமென்கிற நல்லகாரியங்களும் விரோதமாய்த்தன்னையெண்ணுமல் நடக்கிறபடியினுலுந் துக்கமே தோற்றுகிறது. இப்படியே சாத்தியமாயிருக்கப்பட்ட தனத்தைக்குறித்துத் தாயாதிகள் பயமும் ராசசோராக்கினி பயமும்இவைமுதலான மகாபயதுக்கங்களுக் கேதுவாயிருக்கிறபடியினுலும் - இப்படியே சாத்தியமான புத்திரனைத் தொட்டுச் சொன்ன பேச்சுக்கேளாமற் றிரிகிறுனென்றும் புத்திசாலியாகாமற் போனுனென்றுஞ் சாரசோரனுகத் திரிகிறுனென்றும் இவைமுதலான வநேகதுக்கங்கள் வருகிறபடியினுலும் இப்படியே சாத்தியாசாத்தியமா யிருக்கபபட்ட விப்பதார்த்தங்களினுற் றுக்கமே தோற்றுகிற தானபடியினுலுமிந்த விகலோக வைராக்கியமும் அவசியஞ் சம்பாதிக்கவேண்டியது சித்தம்.

பரலோக வைராக்கியமாவ தேதென்றுல் சுவர்க்கலோக முதற் சத்தியலோகம் வரைக்கு முள்ள சகலலோகபோகங்களும் வாந்தாசனமூத்திர புரீஷங்களி லெப்படி யிச்சையில்லையோ வப்படி யிச்சையற்றுப்போகிறதாம்.

இப்பரவைராக்கியம் பண்ணுமற்போனுற் றோஷமென்னவென்று லிகத்தி னகுஷமகாராசன் தேவேந்திரபோகத்தின்பேரி லிச்சைப்பட்டுச் சோடச மகாதானங்களும் அசுவமேத யாகங்களுஞ் செய்து சுவர்க்கத்துக்குப் போய்த் தேவேந்திரப்பட்டமுங் கட்டிக்கொண் டிந்திராணியோடு போகிக்கவேண்டுமென்கிற வதிகப்பரபரப்பினுற்பல்லக்கெடுக்கிற சத்தரிஷியில் அகத்தியரிஷியை யவமானம் பண்ணினபடியினு லவர் சபிக்க வச்சாபத்தினு லவ்விந்திராணிபோகமுதலான சகலபோகங்களும் வியர்த்தமாய்த் தான் பண்

ணின யெக்ஞதான பலன்களும் வியர்த்தமாய் மலைப்பாம் பாய்ப் பூமியில் விழுந்துபோனபடியினாலும் இன்னுமனேகம் பேர் சுவர்க்காதிபோகங்கள் வேண்டுமென்கிற வாசையினு லநேக யெக்கியங்களு மனேகதருமங்களுஞ் செய்தவைகள் வியர்த்தமா யநேகதுக்கங்க ளனுபவிக்கிறார்க ளானபடியி னாலு மச்சுவர்க்கலோகமுதற் சத்தியலோக பரியந்தமுள்ள லோகங்களிலிருக்கிற பிரமாதி சகலதேவதைகளுஞ் சத்த ரிஷிகளு மொருத்தருக்கொருத்த ரன்னியோன்னிய சாபத் தினாலு மொருத்தர் பெண்சாதியை யொருத்த ரபகரிக்கிற படியினாலு மிராக்ஷதா ளிராச்சியங் கட்டிக்கொண்டு போவா ர்களென்கிற பயத்தினாலு மொருத்த ரைசுவரியத்தை யொ ருத்தர் அபகரிக்கிறபடியினாலு மிப்படியே வைகுண்டத் திலுங் கைலாசத்திலு மிருக்கிறபேர்கள்கூட வன்னியோ ன்னிய சாபங்களினாற் றுக்கரூபமா யிருக்கிறபடியினாலு மவ் விடமடைதற்கு மிகவும் பிரயாச சாத்தியமாயிருக்கிறபடியி னாலு மவசியமாய்ப் பரவைராக்கியம் பண்ணவேண்டியது சித்தம்.

இப்படி யிகபரவைராக்கியங்களாற் சகலபோகங்களை யுஞ் சுகதுக்க கன்மங்களையும்விட்டு நிராசையாயிருக்கிற விரண்டாஞ் சாதனங் கைவந்தாற்போதாதோ வென்னிற் போதாது ஏன் போதாதென்றால் சிலபாஷண்டர்க ஷாயந்தரித்துச் சந்நியாசியென்று பேரிட்டுக்கொண்டு சம் சாரத்தையு மோக்ஷப்பிரதானமான கன்மங்களையும்விட்டு த்தன்சரீரசவுக்கியம் பண்ணும்பொருட்டுக் குட்சிவாதைதீ ரச் சிலவித்தைகளைக்கற்றுக்கொண்டு தான் பெரியவனென் கிறபேரினா லெனக்குச் சமானமாரொன் றகங்கரித்துஞ் சபி த்துந் திட்டியு மிதனால் வெகு துக்கமடைந்தவனாக முன்னு

ள்ள வில்லறமும் பின்னுள்ள துறவறமு மின்றி யுபயப்பிர ஷ்டத்துவம் வருகிறபடியினுன் மூன்ருஞ்சாதனமான சமாதி சட்கசம்பத்தியுஞ் சம்பாதிக்கவேண்டும்.

சமாதி சட்க சம்பத்தியாவ தியாதென்னி லதையு நிரு பிக்கிறேம்.

அவையாவன சமம், தமம், உபரதி, திதீக்ஷை, சமாதா னம், சிரத்தை - யெனவாறுவிதமாம்.

இவற்றிற் சமமாவது - மநோநிக்கிரகம் - அஃதாவது மனதைச்சலியாம லகத்திலடக்குவதாம்.

இந்தமநோநிக்கிரகஞ் செய்யாமற்பொனுற் பூருவத்தி லபிமானித்திருந்த பதார்த்தங்களசித்து மவைகளை வாசனை யாநினைத்துக்கொண்டேயிருக்கு மதனுற் றுக்கமேயுண்டா கிறபடியினுலும் வர்த்தமான காலத்திற்ருன் சம்பாதித்த பதார்த்தங்களின் மிகுந்த மோகமாயவைகளை நினைத்துக் கொண்டே யிருக்கு மப்போ தப்பதார்த்தங்களுக்குச் சற்று விக்கினம்வர்ததண்டாளு லதனுல் மிகவும் துக்கமே தோற் றுகிறபடியினுலும் இனிவரப்போகிற பதார்த்தங்களை வாச னையாநினைத்துக் கொண்டேயிருக்கும். அவைவராமற்போ னுற் றுக்கமேவிளைகிறபடியினுலு மித்துக்கங்கண் மனதில டைந்திருக்கச்சே பெரியோர்கள் வசனங்கள் பிடிபடா தபடி யினுலு மிந்த மநோநிக்கிரக மவசியம் பண்ணவேண்டியது சித்தம்.

தமமாவது - பாகியேந்திரிய நிக்கிரகம் அஃதாவது சுரோத்திராதி ஞானேந்திரிய பஞ்சகமும் வாக்காதி கன் மேந்திரிய பஞ்சகமும் இவ்விந்திரியங்களைச் செயம்பண்ணு மற்போனு லிப்பாகியேந்திரியம் விஷயங்களிற் போய்விழும்

அப்படியே போய்விழுந்ததேயுண்டாஞ லதனுன்மகத்தான ஹானிவரும் அஃதேப்படியென்ருல் சத்தவிஷயத்திஞன் மானுக்கெப்படி ஹானிவந்ததோ, பரிசவிஷயத்திஞல் யானைக்கெப்படி ஹானிவந்ததோ, ருபவிஷயத்திஞல் விட்டிற்பூச்சிக்கெப்படி ஹான்வந்ததோ, ரசவிஷயத்திஞன் மீனுக்கெப்படி ஹானிவந்ததோ, கந்தவிஷயத்திஞல் வண்டுக்கெப்பட்டி ஹானிவந்ததோ இப்படியேயிந்த பாகியேந்திரியங்கள் விஷயங்களிற் சென்ருன் மகத்தான ஹானிவருமானபடியிஞ லிப்பாகியேந்திரியங்கள் விஷயங்களிற் போய்விழாம லவசிய நிக்கிரகஞ்செய்யவேண்டியது சித்தம்.

உபரதியாவது ஈஷணுத்திரயத்தியாக பூருவகமான சர்வகர்ம சந்நியாசமாம்.

அக்கன்மமாவது - பாவகன்மமெனவும் புண்ணியகன்மமெனவு மி ண்டாம். இவற்றிற் பாவகன்மத்திஞ னரகப்பிராப்தியுந் திரியக்காதிசரீரமும் வருகிறபடியிஞ லிந்தப்பாவகன்ம மவசியஞ் சர்வாத்மஞ விட்டுவிட வேண்டியது சித்தம்.

இப்படியே புண்ணியகன்மங் காமியார்த்தமாகச் செய்வானேயாகிற் சுவர்க்கலோகப் பிராப்தியும் தேவத்தவமும் மேற்கீழ்ப்போகிறதும் வருகிறதும் ஆனிவிருத்திகளும் லாபாலாபங்களுஞ் ஜநநமரணங்களும் வருகிறபடியிஞ லிந்தக்காமியார்த்தமான புண்ணியகன்மங்களையுஞ் சர்வாத்மஞ விட்டுவிடவேண்டியது சித்தம்.

இப்புண்ணியகன்மம் பகவத்பிரீதியாகப் பண்ணிஞனிட்காமமாம்.

இந்நிட்காம புண்ணியத்துவாரா சித்தசுத்திவரும், இச்சித்தசுத்தித் துவாரா சற்குருலாபங் கிடைக்கும், இச்

சற்குருலாபத்துவாரா சிரவணமுண்டாம், இச்சிரவணத்துவாரா மனனமுண்டாம், இம்மனனத்துவாரா நிதித்தியாசமுண்டாம், இந்நிதித்தியாசத்துவாராசமாதிஞானமுண்டாம், இந்த ஞானத்துவாரா மோக்ஷமடைவார்களாதலாற் புண்ணியகன்மங்களை நிட்காமமா யவசியஞ்செய்யவேண்டியது சித்தம்.

ஈஷணாத் திரயத்தியாகமாவது - தனத்தி னிடத்தும் புத்திரனிடத்துந் தாரத்தினிடத்து மிருக்கின்ற விச்சையை நீக்குதலாம்.

இவ்விதமான வுபரதியை யவசியம் பண்ணவேண்டியது சித்தம்.

திதீக்ஷையாவது- சுகதுக்கங்கள் வரிற்பொறுத்திருத்தலாம். அஃதாவது தான்சம்பாதித்திருக்கிற புத்திரமித்திரகளத்ராதியான சகலபதார்த்தங்களும் செவ்விதாயிருந்தாற் சுகம் அப்பதார்த்தங்களுக் கோர்விக்கினம்வந்தாற் றுக்கம் இச்சுகதுக்கங்கள் லாபாலாபங்கள் மானாவமானங்கள் செயாபசெயங்கள் தன்னையொருவர் வாதிக்கிற் றூன்தண்டிப்பதற் கதிகாரமிருந்தும் பொறுத்தலிவை முதலானவைகளிற் சகித்திருப்பதாம்.

இத்திதீக்ஷை பண்ணுமற்போனு லித்தொந்தங்களிலகப்பட்டநேகவநர்த்தங்களு மநேகபாபங்களு மநேக சாஞ்சல்யங்களுந் தேகசோஷணைகளும் பெரியோர்கள் சகவாசத்துக்கு விக்கினங்களு மவர்கள்சொல்லும் வசனங்கள் மனதிற்றரியாமல் போகிறது மிவைமுதலான தோஷங்களநேகமிருக்கிறபடியினு லிப்பொறுமை ரூபமா யிருக்கப்பட்ட திதீட்சை யவசியம் பண்ணவேண்டியது சித்தம்.

சமாதானமாவது - சடேந்திரியங்களையுஞ் சிரவணத்தி னிருத்தல், அஃதாவது பெரியோர்களிடத்திற் சேர்ந்து சிரவணம்பண்ணுகிறகாலத்தின் மனது மிந்திரியங்களும் வாசனுவசத்திற் செல்லாமற் றிருப்பிச் சிரவணத்தின்பேரிலே சாக்கிரதையாக நிறுத்துதலாம். இதைப் பண்ணுமற்போனுற் பெரியோர்கள் வசனிக்கும் வசனங்கள் மனதிற் பிடிபடாமல் விஷயங்களிற் சென்றுகொண்டிருக்கும். அதனுற் பெரியோர்கள் சொன்னதிற் பயனில்லாமற் றுனிணைத்திருக்கிற காரியமுமாகாமல் உபயப்பிரட்டத்துவம் வருமதனு லநேகதுக்கப்பிராப்திக ளுண்டா மதனுன் மோட்சத்துக்கு விக்கினங்கள் வருகிறபடியினு னிச்சமாதானம் அவசியம் பண்ணவேண்டியது சித்தம்.

சிரத்தையாவது - பத்திவிசுவாசமெனவிரண்டாம்.

அவையாவன - தாய்தந்தை முதலானவைக ளிடத்தி லிருக்கிற பிரியங்களெல்லாஞ் சற்குருவேதாந்த வாக்கியங் களிடத்தி லேகாக்கிரமாகவைப்பது விசுவாசமும் ஈஸ்வர னிடத்தேகாக்கிரமாக வைப்பது பத்தியுமாம்.

இவற்றில் - சற்குருவினிடத்தின் மிகவும் விசுவாசம் பண்ணவேண்டியது ஏன்பண்ணவேண்டியதென்றுல் அவர். மகிமை முன்னதாக நிரூபிக்கிறேம்.

அஃதாவது, பிராந்திரகிதராயும், பரிபூரணராயும், ஞானம்பத்திவைராக்கிய சம்பன்னராயும், நிரந்தர சந்தோஷத்தை யடைந்தவராயும், நித்தியதிருப்தி யடைந்தவராயும், சச்சிதானந்தப் பிரம சுரூபராயும், தேசகாலவஸ்து பரிச்சேதரகிதராயும், சுசாதிவிசாதி சுகதபேத ரகிதராயும், சட்பாவவிகார ரகிதராயும், சுத்தபுத்த முத்தநித்திய பரமான

ந்த சுரூபராயும், சர்வபரிபூரணகருணா சாகரராயும், நிரு வியாச்சிய - நிர்லேப - நிர்ச்சங்க - நிர்வாண - நிட்காம- நிரூ ப - நிரந்தர - நிர்வயவ - நிர்விசேஷானந்த - நிருபத்திரவ - நிபத்த - நிர்வேத்திய - நிர்க்குண - நிரஞ்சன - நிச்சல - நிட் பிரபஞ்ச சுரூபராயும், அச்சேத்திய - அக்கிலேத்திய - அ சோஷிய - அதாகிய - அசல - அவாச்சிய - அநாமய - அக்ஷர - அப்பிரமேய - அசிந்திய - அந்நியபாகிய - அக்குரோத - அவி தர்க்கிய - அதிரிசிய - அநாசிரய - அநாதார - ஆனந்த - அக ண்டாகார சுரூபராயும், விஸ்வ தைசத பிராஞ்ஞைக் கதீத மான பிரத்தியக்கு சைதன்னியராயும், விராட்டிரணியகர்ப்ப வவ்வியாகிருதங்களை யறிகின்ற சர்வசாட்சியராயும், மூலப் பிரகிருதி யகண்டாகார விருத்தி யானந்த விருத்தி யதீதரா யும், கிருதகிருத்தியராயும், சுரூபஞான மில்லாத மூடாள் மலமூத்திரபாத்திரமா யிருக்கப்பட்ட தேகமேநானென் றிந் தச் சரீரத்தைக் குறித்துவந்த ஹானிவிருத்திகளும், சாதி - வர்ணம் - குலம் - கோத்திரம் - ஆசிரமம் - நாமம் - வேஷ மாதிகளும், சநநமரணங்களும் - நானென்றுகொண்டிருக்கிற வாளாய் சங்கற்பவிகற்பமா யிருக்கிற மனதை நானென்று கொண்டிருக்கிறவாளாய் உசுவாச நிசுவாசமா யிருக்கின்ற பிராணவாயுவை நானென்றுகொண்டிருக்கிறவாளாய் ஆபாச மாயிருக்கிற சீவனை நானென்றுகொண்டிருக்கிறவாளாய் சச விஷாணம்போலிருக்கிற சூனியமே நானென்றுகொண்டிருக் கிறவாளாய் இவை முதலான வநேகமதஸ்தர்களும் திரிசிய ங்களாய் பரிச்சின்னங்களாய் - சாவயவங்களாய் அனுர்த சட திக்கரூபங்களாய் அஞ்ஞானமுதலான தேகேந்திரிய பிராண புத்தியே நானென்றுகொண்டிருக்கிறவாளாய்லோககாமியா யிருக்கப்பட்ட சீவனே நானென்றுகொண்டு கிஞ்சிஞ்ஞா

ளாய் - சுத்தமூட சிரோமணியா யிருக்கிறபேர்கள் கூட நிரே
துகமாய் சர்குருவினுடைய வீக்ஷணத்துக்குப் பாத்திரமானார்
களாகில் - அவ்வீக்ஷணாதிசயத்தினாற் சர்வகன்மவிமுத்தாளா
ய் அவர்களிடத்திற் சேருவார்கள், அப்படிச் சேர்ந்தவர்களு
டைய பாவங்களும் ஜநநமரண ரூபங்களாயிருக்கிற சகல
பிராந்திகளும் சூனியம்பண்ணித் தங்களைப்போல்க் கிருதகிரு
த்தியாளாய் பண்ணுகிறவராயு மிருப்பதாயும்.

சீடனது கைப்பொருள் பறிக்கும்படியான வாசாரியர்
வெகுபேருண்டு. அச்சீடனது மனத்தின் கண்ணுள்ள துன்பத்
தைப் பறிக்கும்படியான வாசாரியர் கிடைப்பதரிது.

இப்படிக்குச் சாஸ்திரங்களிற் பிரமாணங்க ளிருக்கிற
படியினாலு மிங்ஙனங் கிடைப்பதற்கரிய சர்க்குருவினிடத்தி
னவசிய மிகவும் விசுவாசம்வைக்கவேண்டியது சித்தம்.

இப்படியே வேதாந்த சாஸ்திரத்தினிடத்திலு மவசிய
மிகவும் விசுவாசம்பண்ணவேண்டியது. ஏன்பண்ணவேண்டி
யதென்றால் வேதாந்த சாஸ்திரங்களிலும் மகா மகிமைகளி
ருக்கின்றபடியினால் அம்மகிமை யென்னவென்றால் அவ்வே
தாந்த சாஸ்திரங்கள் சகலபிராந்திகளையுஞ் சூனியம்பண்
ணுகிறதாகியும் ஜநநமரணமென்கிற சம்சாரசாகரந் தாண்டு
கிறதற்குத் தெப்பமாகியும், சுவகர்ம குணசாலமென்கிற
மேகங்களைப் போக்கடிக்கிற பிரசண்டவாயுவாகியும் ஆதி
யாத்மீக மாதிபவுதீக மாதிதெய்வீகமென்கிற தாபத்திர யா
க்கினிகளைச் சாந்திபண்ணுகிற அமிர்தவருஷமாகியும்புத்திர
மித்திர களத்திர பசுபிராத்தி யக்கிரகக் கிராமக்ஷேத்ர
தனதானியாதிகளிடத்திற் பிரியமோதப் பிரமோதமா யிரு
க்கின்ற வஞ்ஞானமான மோகாந்தகாரத்தைப் போக்கடிக்

கிற சூரியப்பிரகாசமாகியும், தானத்திரய சங்கத்திரய-பந்தத்திரய - சீவத்திரய - சகத்திரய விந்தத்திரய - தெய்வத்திரய - ஈஷணாத்திரய - கர்மத்திரய - காரணத்திரய - வாசனாத்ரயமான விவ்விலங்குகளைப் பேதிக்கிற வச்சிராயுதமாகியும், இதரமான சப்தமீமாம்ச மந்திரகர்மயோக நியாய மிவைமுதலான சாத்திரங்கள்படித்துஞ் சுகதுக்க மோககர்மபந்த சநநமரணங்களை நிரசனம் பண்ணமாட்டாமற் சமுசயங்களோடுகூடியநேக மயக்கங்களினுன் மோட்சமாகிற கரையைக்காணுமலு மிருக்கிறபேர்கள்கூட தெய்வாதீனமாய் வேதாந்தசாத்திர சிரவணம் பண்ணினு லது சகல சமுசயங்களையுஞ் சகல பயதுக்க மோகாதிகளையுந் தள்ளி மோக்ஷகதியைக் காண்பிக்கிறதா யிருக்கிறபடியினு லிந்த வேதாந்த சாத்திரங்களின்பேரின் மிகவும் விசுவாசம் பண்ணவேண்டியது சித்தம்.

இப்படியே ஈஸ்வரனிடத்திலு மவசிய மிகவும் பத்தி பண்ணவேண்டியது. ஏன் பண்ணவேண்டியதென்றால் சகலத்திற்குங் காரணராயும், பாவமும் கர்மமும் நாமமும் ரூபமும் குணங்களுமில்லாமல் உற்பத்திஸ்திதி லயம்பண்ணுகிற நிமித்தம் மாயையினுற் சீவசகத்துக்களை விஸ்திரிக்கிறவராயும், அச்சீவசகத்துக்களி லனுசூதராயும், அவ்வியாகிருத மிரணியகர்ப்ப விராட்டு - பிர்மா - விஷ்ணு - மஹேசுவர ராமகிருஷ்ணுதி யவதாரராயும், சற்குருரூபங்களாயுமிருக்கின்றபடியினு லந்த ஈசுரனைக்குறித்துச் சிரத்தாபத்தியோடும் உபாசனை பண்ணினு லதனு லீசுவரானுக்கிரகமுண்டா யவ்வனுக்கிரகத்தினுற் சகலபாவங்களு நசித்து மோக்ஷத்தை யடைகிறுர்க ளாதலா லிந்தவீசுரனிடத்தி லவசிய மிகவும் பத்திபண்ணவேண்டியது சித்தம்.

இப்படிக் குருவேதாந்த வாக்கிய மீசுராளிடத்தின் மிகவும் விசுவாசம்பண்ணுமற்போனுற் ஜநநமரணப் பிரவாகருபமான சம்சாரதுக்கமென்கிற நரகந் தப்பாமலும் அஞ்ஞானமும் அவிவேகமும் அபிமானமும் ராககர்ம சரீரதுக்க பயாதிகளு மிவைமுதலான சகலபிராந்திகளுஞ் சூனியமாகாமலு மிருக்கின்றபடியினு லவசியம் சற்குருவேதாந்த வாக்கியமீசுர னிவர்களிடத்தின் மிகவுஞ் சிரத்தாபத்தி பண்ணவேண்டியது சித்தம்.

இங்ஙனம் சமதமாதி குணங்களையுடைய சமாதிசட்கசம்பத்தியான மூன்றுஞ் சாதனங் கைவந்தாற் போதாதோ வென்றுற்போதாது. ஏன்போதாதென்றுல் சிலர் தான் ஞானியெனவும், யோகியெனவும், குருக்களெனவும், பாரம்பரியமான பெரியோர்கள் வம்சத்திற் பிறந்தவனெனவுஞ் சொல்லிக்கொண்டு முன்னுள்ள மகான்கள்பேரை வைத்துக்கொண்டு அவர்கள் மகா மகிமையுள்ள குணுதிசயங்கள் தங்களுக்கிருக்கிறதுபோலச் சமதமாதிகளை வரவழைத்துக்கொண்டு நிர்வியாசமாகச் சாந்தாதி குணங்களை யடைந்து மோக்ஷமெப்போது வருமென்கிற விசாரமில்லாமற் சோம்புமயக்கம் சமுசய மிவைகளை யுடையவனுய்த் தேகசவுக்கியத்துக்காக வதற்குத் தகுந்த புசிப்பின் மிகவும் விருப்பமுள்ளவனுய் விசித்திர மார்க்கங்களை யப்பியாசித்துக்கொண்டு ஞானம்போலச்சிலவார்த்தைகளைக் கற்றுக்கொண்டுஆத்மானந்தத்தை யடையாமன் மூடசிரோமணியா யிருப்பார்களாதலால் நான்காஞ்சாதனமான முமூட்சுத்துவமு மவசியஞ் சம்பாதிக்கவேண்டியது - அஃதாவது மோக்ஷவிருப்பமாம் அதையும் நிரூபிக்கிறேம்.

ஜநநமரணப் பிரவாக ரூபமான சமுத்திரத்திலிருக்கி றபேர் தாபத்திரயங்களி லடிபட்டிந்தச் சமுசாரம் மகா ரவுரவாதி நரகத்தைப் பார்க்கிலு மதிகதுக்கமா யிருக்கிற படியினு லிச்சம்சாரத்தில் க்ஷணமாத்திரமாகிலு மிருக்க லாகாதென்று மகாபயத்தையடைந் திப்படிப்பட்ட கோர மான சம்சாரபயதுக்க மோகப்பிரமைகளைப் போக்கடித்து நித்தசுத்த - புத்த - முத்த - சத்திய பரமானந்தாத்துவித சுக சுரூபமா யிருக்கப்பட்ட சாம்பிராச்சியத்தை எந்தப் பெரியோர்களா லடையலாகுமோ இப்படிப்பட்ட சற்குரு வெங்கே யிருக்கிறுரோ விதற்கென்ன சாதனங்கள் வேண் டுமோ வென்கிற விசாரத்தோடுந் தலையிநெருப்புப் பற்றி னவனுக்கும் நாக்குவறண்டுபோனவனுக்குந் தண்ணீரைக் கண்டாலொழிய வொருகாரியத்திலு மனது மீளாததுபோ ல வெப்போது மோக்ஷம்வரப்போகிற தென்றெடுத்த வி டாய்தீராமற் கிருதகிருத்தியனுமளவும் விசாரத்தினுற் றபி த்துக்கொண்டிருக்கிறதே முமூட்சுத்துவமென்று சொல் லப்படும்.

இந்த முமூட்சுத்துவ மில்லாவிட்டாற் ஜநந மரணமெ ன்கிற நரகம்விடாது பந்தமும் போகா தானபடியினு லெவ் விதத்தினு முமூட்சுத்துவஞ் சம்பாதிக்க வேண்டியது சித்தம்.

இச்சாதனங்களுள்ளவனே பிரமவிசாரத்துக் கதிகாரி யாவன். அவ்விசாரமாவது, சட மின்னதென்றறிந்து அதை நீக்கிச் சத்தையறிகிறதற்குச் சற்குரு தரிசனமா யவரிடத்தி ன் மகாவாக்கிய உபதேசம் பெற்றுக்கொண்டு வேதாந்த மகாவாக்கியார்த்த நிச்சயமான சீவபரஐக்கியத்தை நன்

ருகவிசாரித்தவைகளொன்றான வனுபவமுண்டாக விசாரிப்பதே விசாரணையாம்.

அஃது வேண்டுமென்பதற்குத் திஷ்டாந்தம் பசிக்கன்னம் வேண்டினவனுக் கதற்குச் சாதனமான இடம் விறகு-பாத்திரம் - சலம் - அரிசி இவைகளிருக்கினும் பசியைப் போக்கடிக்கமாட்டாது. இவைகளுடனே அக்கினியொன்று கூடினு லவ்வரிசியை யன்னமாகப் பாகம்பண்ணி யச்சாதனங்களுடனே தானு நட்டமாய்ச் சாடராக்கினிரூபமாயிருந்துகொண்டு முன் பாகம்பண்ணின வன்னத்தைப் புசித்துப்பசிநீங்கி யச்சாடராக்கினியுந் திருத்தியாகாரமா யெப்படிச்சுகமாயிற்றோ வப்படியே ஆத்மவிசாரமென்னு மக்கினி பிறந்து குருவென்கிற விடத்தில் வியாபித்து வேதாந்தசாத்திரமென்கிற விறகினாற் பிரகாசித்து மானுடசன்மமென்கிற பாத்திரத்திற் சாந்தகுணமென்கிற சலத்திற் சையோகமாய் அறிவென்கிற வரிசியைப் பாகம்பண்ணி அவ்விசாராக்கினியு முன்னுள்ள சாதனங்களோடு நட்டமாய்த் தான் சமைத்தபூரணமான வன்னத்தைப்புசித்து ஜநநமரணமென்கிற துக்கமானபசிநீங்கி தனக்கெதிரிலாத வத்து விதானந்த திருப்தியையடைந் தத்திருப்தியினாற் சலத்திலுண்டான வுப்பு சலாகாரமாவதுபோல ஞானானந்தத்தி லுண்டானவிசாரமும் ஞானானந்தாகாரமாய் மோட்சமடைய வேண்டுமாதலா லச்சாதன சதுஷ்டயமுள்ளவற் கிவ்விசார மவசியம் பண்ணவேண்டியது சித்தம்.

சாதனசதுஷ்டயப்பிரகரணம் முற்றுப்பெற்றது.

சர்வஞ்சின்மயம்.